**செ. கு. எண்: 065** **நாள்: 29.06.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 29.6.2019</u>

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வாள்வச்சகோஷ்டம் கிராமத்தில் மின் இணைப்பு பணியில் ஈடுபட்டிருந்த திரு. அப்பு என்பவரின் மகன் திரு. வில்பிரட் என்பவர் உயர் மின் அழுத்த கம்பி உரசியதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திரு. தனகோட்டி என்பவரின் மனைவி திருமதி மாரியம்மாள் என்பவர் துணி உலர்த்தும் போது வீட்டின் அருகே இருந்த மின் கம்பியில் எதிர்பாராத விதமாக கைபட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்பும் மாவட்டம், சின்னசேலம் வட்டம், பைத்தந்துறை புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் திரு. ரஞ்சித் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், துவரங்குறிச்சி, அத்திவெட்டி மேற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பையன் என்பவரின் மகன் திரு. சந்திரன் என்பவர் மின்மாற்றியில் மின் இணைப்பு பணியின் போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், வியாசர்பாடி, அன்னை இந்திரா நகரைச் சேர்ந்த திரு. துரைவேல் என்பவரின் மகன் திரு. வெங்கடேசன் என்பவர் கழிவு நீர் குழாய் சரிசெய்யும் பணியின் போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டம், திசையன்விளை கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்ரமணியன் என்பவரின் மகன் செல்வன்

கண்ணன் என்பவர் எதிர்பாராத விதமாக மின் கம்பியை தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வனவாசி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாதேஸ் என்பவரின் மகன் சிறுவன் சரவண பாலாஜி என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டம், கரைச்சுத்து உவரி கிராமத்தைச் சேர்ந்த திரு. தேவராஜ் என்பவரின் மனைவி திருமதி பானுமதி என்பவர் முந்திரி தோட்டத்திற்கு சென்ற போது பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி மற்றும் பாம்பு கடித்து உயிரிழந்த **எட்டு நபர்களின்** குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி மற்றும் பாம்பு கடித்து உயிரிழந்த **எட்டு நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**